17.11.2025

அ.வ.எண்.148/2023

வா.சா.1 - சிவரஞ்சினி, த/பெ. செந்தில்வேலன்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 18.11.2025 is accordance with the provision of Act X of 3331

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்குதெரியும் என்றால் சரிதான். வழக்கறிஞர் தயார் செய்து கொடுத்தாரா என்றால் நான் சொன்னதன் பேரில் தயார் செய்து கொடுத்தனர். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் பற்றி எனக்குதெரியும். TONI & GUY என்பது என்ன என்றால் ப்யூட்டி சலூன் ஆகும். நான் ப்யூட்டிசன் படித்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனக்கும், TONI & GUY நிறுவனத்திற்கும் என்ன தொடர்பு என்றால் மேற்படி நிறுவனம் மூலமாக சலூன் வைக்கலாம். நான் மேற்படி நிறுவனத்தின் முகவரா என்றால் அந்த பெயரை வைத்து தொழில் செய்யலாம். அவ்வாறு தொழில் செய்ய நான் அனுமதி பெற்றுள்ளேனா என்றால் ஆமாம். அவ்வாறு அனுமதி பெற்றதை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை.

2. TONI & GUY நிறுவனத்தின் பெயரை பயன்படுத்த ஆவணத்தின் படி எனக்கு உரிமை இல்லை என்றால் தவறு. நான் 21.03.2023 தேதியில் பிரதிவாதியிடம் ஒப்பந்தம் செய்து கொண்டேன். நான் முன்பணமாக எவ்வளவு தொகை கொடுத்தேன் என்றால் ரூ.5,50,000/- இல் ரூ.4,50,000/-ரொக்கமாகவும், ரூ.1,00,000/- வங்கி கணக்கு மூலமாகவும் கொடுத்தேன். நான் ஒரு காசோலையை பிரதிவாதியிடம் கொடுத்தேன். எத்தனை ரூபாய்க்கு காசோலை கொடுத்தேன் என்றால் நினைவில்லை, கையொப்பம் செய்தேன். நான் இரு காசோலைகளை கொடுத்தேன் என்றால் சரியல்ல. முதல் காசோலைக்கு ரூ.1,00,000/- பணத்தை என் வங்கி மூலம் செலுத்தினேன் என்றால் சரியல்ல. காசோலை மூலமாக நான் பணம் கொடுக்கவில்லை, வங்கி கணக்கு மூலம் தான் பணம் செலுத்தினேன்.

3. வா.சா.ஆ-3 கணக்கு விவரப்பட்டியலில், 27.03.2023 தேதியில் காசோலை எண்.57026 மூலமாக ஆக்ஸிஸ் வங்கி காசோலை மூலமாக ரூ.1,00,000/- செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரூ.4,50,000/-க்கு பிரதிவாதியிடம் ஒரு காசோலையை நான் கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. வாடகைக்கு விட்டுள்ள இடமானது முதல் தளத்தில் திறந்த வெளியாக உள்ளது என்றால் சரியல்ல, என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 கட்டிட வரைபடத்தின் படி 1000 சதுரடி கட்டிடத்தை நான் வாடகைக்கு எடுத்திருந்தேன் என்றால் சரிதான். அந்த இடம் சம்மந்தமான வழக்கு தான் என்றால் சரிதான். அந்த இடத்தை எங்களுக்கேற்றவாறு அறைகளை பிரித்து கொண்டோம் என்றால் சரிதான்.

4. மேற்படி கட்டிட வரைபடத்தில் உள்ள 1000 சதுரடி உள்ள கட்டிடத்தை ஒப்பந்தப்படி பிரித்து(Partition) கொண்டோம் என்றால் சரிதான். Partition க்குண்டான பொருட்களை விலைக்கு வாங்கினேன் என்றால் ஆமாம். அந்த ரசீதுகளை நான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நான் ப்யூட்டிசன் படிக்காததால் வேலைக்கு ஆட்களை வைத்து தொழில் நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். அவர்களுக்கு கொடுத்த சம்பளம் சம்மந்தமான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் நான் ரொக்கமாக கொடுத்தேன். எங்களது கடைக்கு தேவையான பர்னிச்சேர்களை விலைக்கு வாங்கினேன் என்றால் சரிதான். அதே கடையில் தான் போட்டுள்ளேன் என்றால் சரிதான், அந்த புகைப்படங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பர்னிச்சர் சம்மந்தமாக பிரச்சனை எதுவும் இல்லை.

5. எங்களது கடைக்கு 20 KV மின்சாரம் வேண்டும் என ஒப்பந்தம் போட்டுள்ளேன் என்றால் சரிதான். அதில் UPS மூலமாக தொழில் நடத்தினேன் என்றால் சரிதான். பிரதிவாதி எங்களுக்கு மின்சார இணைப்பு கொடுக்கவில்லை. UPS வாங்கியதற்கான ரசீதுகளை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கடை ஆரம்பித்த இரண்டு மாதங்கள் பிரதிவாதி அவரது ஜெனரேட்டர்கள் மூலமாக மின்சாரம் சப்ளை செய்தார், பின்னிட்டு என்னையே UPS மூலமாக மின்சாரம் பயன்படுத்துமாறு சொன்னார். UPS பேட்டரி சார்ஜ் தீர்ந்து போனால் வெளியே கொண்டு சென்று சார்ஜ் போட்டு கொண்டு வந்து பயன்படுத்துவோம்.

6. ஆங்கில பிரதி மாதம் 5 ம் தேதிக்குள் வாடகை செலுத்த வேண்டும் என ஒப்பந்தத்தில் உள்ளது என்றால் சரிதான். இன்றுவரை வாடகை ஒப்பந்தப்படி வாடைகையை பிரதிவாதி வங்கி கணக்கில் செலுத்தினேனா என்றால் ஒப்பந்தத்தின்படி 5 ம் தேதிக்குள் ரூ.55,000/- அவரது வங்கி கணக்கில் செலுத்த வேண்டும் என்று சொன்னார். பிரதிவாதி என்னிடம் வாடகை பணம் ரொக்கமாக வேண்டும் என சொன்னார். TONI & GUY நிறுவனத்தின் பெயரை பயன்படுத்த நான் ரூ.4,00,000/- டெபாசிட் பணம் கொடுத்தேன். TONI & GUY ORGANISATION க்கு ரூ.4,00,000/- பணமாக கொடுத்தேன்.

7. எனக்கு, மேற்படி நிறுவனத்தின் பெயரில் வங்கி கணக்கு உள்ளது என்றால் இல்லை, என் பெயரில் தான் உள்ளது. TONI & GUY நிறுவனத்தின் நிபந்தனைகளின் படி GST-யுடன் சேர்த்து பில் ரசீது வழங்க வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு பில் ரசீதின் நகலை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பாப்பம்பட்டி பிரிவு எந்த பஞ்சாயத்தின் கீழ் வருகிறது என்று தெரியாது. நான் தொழில் வரியை இதுவரை செலுத்தவில்லை என்றால் சரிதான், பிரச்சனையாக இருந்தது. நான் தொழில் செய்யும் காம்ப்ளக்ஸ்ல் பொது செலவு என உள்ளது என்றால் அது பற்றி பிரதிவாதி என்னிடம் சொல்லவில்லை. இதுவரை நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் எதுவும் சொல்லவில்லை.

8. வாடகை ஒப்பந்தத்தில் பொது செலவு பற்றி சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வாடகை ஒப்பந்தத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி நிபந்தனைகள் எனக்கு தெரியும் என்றும், தற்போது வேண்டும் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி எனக்கு ஒத்துழைப்பு கொடுக்காததால் எனது வழக்கறிஞர் மூலம் சட்ட அறிவிப்பு அனுப்பினேனா என்றால் என் கணவருக்கு தான் தெரியும். நான் வாடகைக்கு இருப்பதாக சொல்லும் இடத்தில் MAXSON MECCAND TECHNICA UMPRA LTD என்ற நிறுவனம் இயங்கி வருகிறது என்றால் எனக்கு தெரியாது. எனக்கு தெரியாமல் அவ்வாறு செய்துள்ளனர்.

9. நான் ரூ.1,00,000/- முன்பணம் கொடுத்துவிட்டு மீதம் ரூ.4,50,000/- காசோலை கொடுத்துவிட்டு அதற்கு பணமும் செலுத்தாமல் காலதாமதம் செய்து வந்து பிரதிவாதி அணுகிபோதெல்லாம் சரியான பதில் ஏதும் சொல்லாமல் சாக்கு போக்கு சொல்லி காலம் கடத்தி வந்ததால் எனது முன்பணத்தொகையான மேற்படி தொகையை வங்கியில் செலுத்தாமல் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக மேற்படி நிறுவனத்திற்கு அவர் வாடகைக்கு விட்டு சுவாதீனம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் வாடகைக்கு வராமல் வாடகைக்கு வந்ததாகவும், சுவாதீனத்தில் உள்ளதாகவும் பொய்யான சங்கதிகளை சொல்லி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளது, ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

10. பிரதிவாதி கனகராஜ், மூத்த குடிமகன் என்றும், அவருக்கு இந்த வழக்கின் மூலமாக மிகப்பெரிய மன உளைச்சலை ஏற்படுத்தி அவரது உடல்நலத்தை கெடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எங்களது அசல் வழக்கு மற்றும் இடை மனுவும் நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 புகைப்படத்தில் உள்ளது பிரதிவாதியின் அலுவலகம் என்றால் சரியல்ல, எனக்கு ஒதுக்கப்பட்ட இடம் ஆகும். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் நானும், பிரதிவாதியும் உள்ளோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளவாறு படம் எங்கு வேண்டுமானாலும் எடுக்கலாம் என்றால் சரியல்ல, நாங்கள் பூஜையின் போது எடுத்த படம். வா.சா.ஆ.4 புகைப்படமானது வழக்கிற்காக ஏற்படுத்தப்பட்டது என்றும், அது நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur